

# வருடாந்த சாத்திய அறிக்கை 2013

## வளிமண்டலவியல் திணைக்களம்

### அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

# பொருளடக்கம்


1. அறிமுகம் 3
 1.1 பின்னணி 3
 1.2 பணிகள் 3
 1.3 நிறுவனக் கட்டமைப்பு 4
 1.4 பிரதான பிரிவுகளின் பொறுப்புக்கள் 4
2. செயலாற்றுகை 8
 2.1 காலநிலையியல் தரவு முறைமையைப் பராமரித்தலும் பாதுகாத்தலும் 8
  2.1.1 தரவுகளைச் சேகரித்துலும் பராமரித்தலும 8
   2.1.1.1 நில மேற்பரப்பு மட்டத்தின் அவதானிப்பு (surface observation) 9
   2.1.1.2 வளிமண்டல அவதானிப்புகள் *(Air Observation)* 11
  2.1.2 தரவு முறைமையைப் பாதுகாத்தல் 12
  2.1.3 தரவுகளைச் சந்தைப்படுத்துதல் 12
 2.2 பொது மக்களுக்கும் பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கும் பல்வேறுபட்ட கைத்தொழில்களுக்கும் உரியதாக சமுதாயத்திற்கும் உலக வானிலை அவதானிப்பு வலையமைப்புகளுக்கும் தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல். 13
  2.2.1 பொதுமக்களுக்காக தினசரி வழங்கப்படும் தகவல்கள 13
  2.2.2 பலவேறுபட்ட நிறுவனங்களுக்கும் பல்வேறுபட்ட கைத்தொழில்களுக்கும் உரியதாக சமுதாயத்திற்குப் பெற்றுக்கொடுக்கப்படும் தகவல்கள். 13
  2.2.3 உலக அவதானிப்பு வலையமைப்புகளுக்கு தரவுகளைப் பெற்றுக்கொடுத்தல் 14
 2.3 விண் வானிலைத் தகவல்களை விமான சேவைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் கப்பற் பணிகளுக்காக சேவைகளை வழங்குதல் 15
  2.3.1 விண் வானிலைத் தகவல்களை விமான சேவைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல் 15
   2.3.1.1. கட்டுநாயக்க விமான நிலையம். 15
   2.3.1.4 ஏனைய சேவைகள் 16
  2.3.2. கப்பற் பணிகளுக்காக சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல் 16
   2.3.2.1 கப்பற் பணிகளுக்காக தீவைச் சூழ்ந்த கடற் பிரதேசத்தின் வானிலை அறிக்கை (ளூானீபைெ சுநிழசவ) 16
   2.3.2.2 சர்வதேச கடல் பிரதேசத்தின் வானிலை அறிக்கை *(குடநநவ குழசநஉயளவ)* 17
 2.4 சுனாமி மற்றும் சீரற்ற வானிலை பற்றிய முன்னெச்சரிக்கை விடுத்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் 17
  2.4.1 சுனாமி பற்றிய எச்சரிக்கைகளை விடுத்தல் 17
  2.4.2 சீரற்ற வானிலை பற்றிய அறிவிப்புக்கள் 18
 2.5. விடயப் பரப்புத் தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்டுதல், ஆலோசனை மற்றும் உபகரணங்களை வழங்குதல் 18
   2.5.1.1 தலைமையகத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தருகின்றவர்களை விழிப்பூட்டுதல் 18
   2.5.1.2 பிராந்திய ரீதியில் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல். 19
   2.5.1.3 கருத்தரங்குகளும் கலந்துரையாடல்களும் 22
   2.5.1.3.1 உலக வளிமண்டலவியல் தினம் 22
   2.5.1.4. அறிக்கைகளை விடுத்தல் 22
   2.5.1.5. சேதத்துக்கு மகுடம் கண்காட்சியில் கலந்து கொள்ளல் 23
  2.5.2 ஆலோசனைகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் 23

2.6 விடயத்துறையுடன் சம்பந்தப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளுதலும் ஆராய்ச்சிக்குத் தேவையான விஞ்ஞான ரீதியிலான விஞ்ஞான சேவைகளை வழங்குதலும் 24
2.7 நட்சத்திரவியல் மற்றும் நில ஈர்ப்புவிசை சம்பந்தமான வரையறுக்கப்பட்ட சேவைகளை வழங்குதல் 25
2.8 திணைகக்களத்தின் அபிவிருத்திப் பணிகள் 25
2.8.1 கொள்கை ஆக்கம் 25
2.8.1.1 இடிமின்னல் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு 25
2.8.1.2 அங்கீகரிக்கப்பட்ட கருமமாற்றும் விதிமுறையை தயாரித்தல் 25
2.8.2 சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல் 26
2.8.3. புதிய அலுவலகத்துக்கான கட்டிடத்தை நிர்மாணித்தல் 26
2.9 திணைக்கள பதவியணியினருக்கான புலமைப்பரிசில், பயிற்சித் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் 27
2.9.1. வெளிநாட்டு பயிற்சி நெறிகளை / கருத்தரங்குகளில் கலந்து கொள்ளல் 27
2.9.2. உள்நாட்டுப் பயிற்சிகள் 33
2.10 நிருவாக மறறும் நிதி பிரிவின் செயலாற்றுகை 38
2.10.1 நிதிப்பிரிவு 38
2.10.2 நிதிப்பிரிவு 44
2.10.2.1 வருமானங்கள் 44

# 1. அறிமுகம்

## 1.1 பின்னணி

1867 ஆம் ஆண்டு நில அளவையாளர் திணைக்களத்தின் கீழ் வளிமண்டலவியல் அவதானிப்பு நடவடிக்ககைகள் ஆரம்பமானதோடு வளிமண்டலவியல் நடவடிக்கைகளுக்காக தனியான ஒரு பிரிவு 1909 ஆம் ஆண்டு கொழும்பு அவதானிப்பு நிலையம் என்ற வகையில் தற்போதைய வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் அது 1948 ஆம் ஆண்டு சுயாதீன திணைக்களமாக மாற்றியமைக்கவும்பட்டது.

## 1.2 பணிகள்

வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்கும் அரச நியதிச் சட்ட நிறுவனம் என்ற வகையில் பின்வரும் பிரதான பணிகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும்.

1. காலநிலையியல் தரவுத் தொகுதிகளைப் பராமரித்தல் மற்றும் பேணிவருதல்.
2. பொது மக்களுக்கும், பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கும், உலக வானிலை அவதானிப்பு வலையமைப்புகளுக்கும் தரவுகளை/தகவல்களை பெற்றுக்கொடுத்தல்.
3. விண் வானிலைத் தரவுகளை/தகவல்களை வான் சேவைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல்.
4. சுனாமி மற்றும் வேறு விதமான வானிலை மாற்றங்கள் தொடர்பாக முன்னெச்சரிக்கை விடுத்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
5. விடயப் பரப்புத் தொடர்பாக பொதுமக்களை விழிப்பூட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் உபகரணங்களை வழங்குதல்.
6. விடயப் பரப்புக்குரிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல், ஆய்வுகளுக்குத் தேவையான விஞ்ஞான ரீதியான சேவைகளை வழங்குதல்.
7. வானியல் மற்றும் புவிக் காந்தவியல் சம்பந்தப்பட்ட வரையறுக்கப்பட்ட சேவைகளை வழங்குதல்.

உலக வளிமண்டலவியல் சங்கத்தின் அங்கத்துவத்தைக் கொண்டுள்ள திணைக்களமானது மேற்படி சகல சேவைகளையும் உலக வளிமண்டலவியல்

சங்கத்தினதும் ( WMO) சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினதும்(ICAO) தரநியமங்களுக்கேற்ப பெற்றுக்கொடுக்கின்றது.

### 1.3 நிறுவனக் கட்டமைப்பு

பணிப்பாளர் நாயகம் ஒருவரின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற திணைக்களமானது ஐந்து பணிப்பாளர்களின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற ஐந்து (05) பிரதான பிரிவுகளையும், அதனோடு இணைந்த பதினொரு (11) உப பிரிவுகளையும் கொண்டமைந்துள்ளது.

தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக பிராந்திய வளிமண்டலவியல் நிலையங்கள் இருபத்திரண்டும் (22), தன்னியக்க வானிலை அவதானிப்பு நிலையங்கள் 36 உம், விவசாய வளிமண்டலவியல் நிலையங்கள் 35 உம், மழைவீழ்ச்சி அளவீட்டு நிலையங்கள் 400 உம் திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்றன.

### 1.4 பிரதான பிரிவுகளின் பொறுப்புக்கள்

| தொடர் இலக்கம் | பிரதான பிரிவு | உப பிரிவு | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 1. | அவதானிப்பு வலையமைப்புகள் மற்றும் உபகரணங்கள் | 1.1 உபகரணப் பிரிவு | வளிமண்டலவியல் உபகரண இலக்கத் திருத்தம் மற்றும் பராமரிப்பு, தச்சு மற்றும் தொழில்நுட்பப் பணிகள் மற்றும் கண்காட்சி நடவடிக்கைகளுக்கு உதவியளித்தல். |
| | | 1.2 மின் மற்றும் இலத்திரணியல் பராமரிப்புப் பிரிவு | மின் மற்றும் இலத்திரணியல் உபகரணங்களைத் திருத்துதல் மற்றும் பராமரித்தல், தன்னியக்க வளிமண்டலவியல் நிலைங்களின் உபகரணங்களைப் பராமரித்தல். |
| | | 1.3 ராடார்/ ரேடியோசொண்ட் பிரிவு | உயர் வளிமண்டலப் பகுதிகளை அவதானித்தல், அத்தரவுகளின் தரக் கட்டுப்பாடு, பாதுகாப்பு மற்றும் தரவுகளை வெளித் தரப்புகளுக்கு வழங்குதல். |

| | | | |
|---|---|---|---|
| | | 1.4 பிராந்திய வளிமண்டலவியல் நிலையங்கள் | ஒவ்வொரு 3 மணித்தியாலங்களுக்கொருமுறை புவியின் மேற்பரப்புக்கான வளிமண்டலவியல் அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்ளுதல். விமான நிலைய மையங்களின் மூலம் ஒவ்வொரு அரை மணித்தியாலங்களுக்கொருமுறை விமானப் பயணங்களுக்குத் தேவையான வானிலை அளவுகோல்களைப் பெற்று உலகம் பூராகவும் அமைந்துள்ள விமான நிலைய சேவைகளுக்கும் வளிமண்டலவியல் நிலையங்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. உயர் வளிமண்டலப் பகுதியில் காற்றின் வேகம் மற்றும் திசை என்பவற்றை ஒவ்வொரு 06 மணித்தியாலங்களுக்கொருமுறை பெற்றுக் கொள்ளுதல். |
| 2. | தரவுச் செயன்முறையும் பாதுகாப்பும் | 2.1 தரவுப் பிரிவு | தொடர்ச்சியாக தரவுகளைப் பதிகின்ற உபகரணங்களின் தரவுத் தரக் கட்டுப்பாடு, பாதுகாப்பு மற்றும் தரவுகளை வெளித் தரப்புகளுக்கு வழங்குதல். |
| | | 2.2 காலநிலையியல் பிரிவு | பிராந்திய நிலையங்களின் இணைப்பாக்கம் மற்றும் முகாமைத்துவம், வளிமண்டலவியல் மற்றும் சோதிட தரவுகளின் தரக் கட்டுப்பாடு மற்றும் தரவுகளைப் பாதுகாத்தல். |
| | | 2.3 நீர் வானிலைப் பிரிவு | மழை வீழ்ச்சி அளவீட்டு நிலையங்களின் இணைப்பாக்கம், தரவுத் தரக் கட்டுப்பாடு, பாதுகாப்பு மற்றும் தரவுகளை வெளித் தரப்புகளுக்கு வழங்குதல் |
| | | 2.4 விவசாய வானிலைப் பிரிவு | விவசாய வானிலை வலையமைப்பை முகாமை செய்தல் மற்றும் தரவுகளின் தரக் கட்டுப்பாடு, பாதுகாப்பு மற்றும் தரவுகளை வெளித் தரப்புகளுக்கு வழங்குதல் |
| | | 2.5 கனணிப் பிரிவு | வானிலைத் தரவுகளை கனணிமயப்படுத்தல், |

| | | | |
|---|---|---|---|
| | | | கடந்தகால வானிலைத் தரவுகளைப் பெற்றுக்கொடுத்தல், தரவுகளின் தரக் கட்டுப்பாடு, இலத்திரணியல் பாதுகாப்பு, தரவுகளை வெளித் தரப்புகளுக்கு வழங்குதல் |
| 3. | எதிர்வுகூறல்களும் முடிவுகளை மேற்கொள்வதற்காக உதவுகின்ற காரணிகளும் | 3.1 தேசிய வளிமண்டலவியல் மற்றும் அனர்த்த முன்னெச்சிக்கை நிலையம் | வானிலைத் தரவுகளை அவதானித்தல்,வலய அவதானிப்புக்களை வரைபடமாக்குதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அதன் மூலம் வானிலை பற்றிய எதிர்வுகூறல், நில அதிர்வுகள் மற்றும் சுனாமி நிலைமைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற அவதானிப்புக்கள் மற்றும் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் முன்னெச்சரிக்கை விடுத்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல், திணைக்களத்தின் இணையத்தளத்தை இற்றைப்படுத்திப் பேணிவருதல், வானிலை மற்றும் காலநிலை பற்றிய ஆலோசனைச் சேவைகளை வழங்குதல். |
| | | 3.2 தொடர்பாடல் பிரிவு | வளிமண்டலவியல் அவதானிப்புக்களை ஒன்றுதிரட்டுதல் மற்றும் தொடர்பாடல், எதிர்வுகூறல்கள் மற்றும் அனர்த்தங்கள் பற்றிய முன்னெச்சரிக்கை விடுத்தலை கடத்துதல் |
| | | 3.3 விமான நிலைய வளிமண்டலவியல் அலுவலகங்கள் | விண் வானிலைக்குத் தேவையான தரவுகளை/தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் |
| 4. | ஆய்வு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 4.1 ஆய்வுப் பிரிவு | வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் ஆய்வுகளை நடத்ததல் |
| 5. | நிருவாகம் மற்றும் நிதி | 5.1 தாபனப் பிரிவு | பணியாற்றொகுதியினர் சம்பந்தப்பட்ட தாபன நடவடிக்கைகள் |
| | | 5.2 நிதிப் பிரிவு | நிதி நடவடிக்கைகள் |
| | | 5.3 கொள்வனவுப் | கொள்வனவு, கலஞ்சியப்படுத்தல் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | பிரிவு | விநியோகம். |
| | | 5.4 விசேட கொள்வனவுப் பிரிவு | வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகள் |
| | | 5.5 போக்குவரத்துப் பிரிவு | வாகணப் பராமரிப்பும் போக்குவரத்து நடவடிக்கைகளும். |
| | | 5.6 நிர்மாணப் பிரிவு | திணைக்களத்திற்குத் தேவையான கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்புச் சம்பந்தப்பட்ட இணைப்பாக்கம். |

# 2. செயலாற்றுகை

## 2.1 காலநிலையியல் தரவு முறைமையைப் பராமரித்தலும் பாதுகாத்தலும்

### 2.1.1 தரவுகளைச் சேகரித்துலும் பராமரித்தலும்

வளிமண்டலத்தின் ஒரு இடத்தில் வானிலைச் சம்பவங்கள் ஏற்படுவதற்காக சுற்றியுள்ள வளிமண்டலத்தின் தொழிற்பாடும் தாக்கம் ஏற்படுத்துகின்றது. எனவே, அது தொடர்பான கற்கைகளுக்கு அந்த இடத்தில் மட்டும் வளிமண்டலத்தை அவதானிப்பது போதுமானதாக அமையமாட்டாது. எனவே, எம்மைச் சுற்றியுள்ள வளிமண்டல்த்தின் அவதானிப்புக்களும் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும். இப்பகுப்பாய்வுக்காக ஏனைய நாடுகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அவதானிப்புக்களும் பயன்படுத்தப்படுவதனால் சகல நாடுகளும் வளிமண்டலவியல் அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய உபகரணங்கள் மற்றும் அவற்றுக்கான தரநியமங்கள், அவதானிப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நேரங்கள் என்பன உலக வளிமண்டலவியல் சங்கத்தினால் (WMO) தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு உலக வளிமண்டலவியல் சங்கத்துடன் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டுள்ள சகல நாடுகளும் மேற்படி நியமங்களுக்கேற்பவே அவதானிப்புக்களை மேற்கொள்கின்றன. எந்தவொரு நாட்டினாலும் மேற்கொள்ளப்படுகின்ற அவதானிப்புக்களை ஏனைய நாடுகள் தமது அவதானிப்புக்ளுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்து மிகவும் துல்லியமான தீர்மானங்களை எட்டுவதற்காக இந்த முறையின் மூலம் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதன்படி, இலங்கையானது உலக வளிமண்டலவியல் சங்கத்தின் தொழில்நுட்ப ஆலோசனைகள், நிபந்தனைகள் மற்றும் தரநியமங்களுக்கேற்பவே அவதானிப்புக்களை மேற்கொள்கின்றது.

மேற்கொள்ளப்படுகின்றதான வானிலை அவதானிப்புக்கள்

- தரை மட்டத்திலிருந்தும் தரை மட்டத்தின் கீழிலிருந்தும் (நில மேற்பரப்பு - surface observation) பெற்றுக்கொள்ளப்படுகின்ற அவதானிப்புக்கள்.
- வளிமண்டல அவதானிப்புக்கள் (air observation), அதாவது தரை மட்டத்திலிருந்து மேல் நோக்கி 20 கி.மீ. வரையிலான வளிமண்டலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அவதானிப்புக்கள்.

### 2.1.1.1 நில மேற்பரப்பு மட்டத்தின் அவதானிப்பு (surface observation)

#### 2.1.1.1.1. புவி மேற்பரப்பு அவதானிப்புக்கள்

புவியின் மேற்பரப்பு மட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற அவதானிப்புக்கள் மழைவீழ்ச்சி, அமுக்கம், வெப்பம், வளியின் ஈரப்பதன், காற்றின் வேகம் / திசை, காண்புநிலை, முகில் வகை / அளவு ஆகிய பரமாணங்களுக்காகவே பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த அவதானிப்புக்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொலொனறுவை, புத்தளம், நுவரெலியா, இரத்தினபுரி, இரத்மலான, கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள நிலையங்களினால் கிரின்விச் நேரத்தில் 0000, 0300, 0600, 0900, 1200, 1500, 1800, 2100 ஆகிய மணித்தியாலங்களின்போது ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொள்ளப்படுவதோடு அத்தரவுகளை உலகத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக புதுடில்லியில் அமைந்துள்ள வலய நிலையத்திற்கு விநியோகிக்கும் பொருட்டு கொழும்பு தலைமையகத்தில் அமைந்துள்ள தொடர்பாடல் பிரிவிற்கும், எதிர்வுகூறல்களுக்காக தேசிய வளிமண்டலவியல் நிலையத்திற்கும், விமான நிலைய வளிமண்டலவியல் அலுவலகங்களுக்கும் அவதானிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டவுடன் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதேவேளை, யாழ்ப்பாணம், வவுனியா, பொத்துவில், மஹஇலுப்பள்ளம, மன்னார், பதுளை, பண்டாரவளை, மொனராகலை, குருநாகல் ஆகிய நிலையங்களில் கிரின்விச் நேரத்தில் 0000, 0300, 0600, 0900, 1200, மற்றும் 1500 ஆகிய மணித்தியாலங்களின் போது மேற்கூறப்பட்டவாரே அவதானிப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதன்படி வருடம் பூராகவும் மேற்கொள்ளப்பட்ட புவியின் மேற்பரப்பு அவதானிப்புக்களின் எண்ணிக்கை 59, 411 ஆகும்.

#### 2.1.1.1.2 மழை வீழ்ச்சி பற்றிய தரவுகள்

மழை வீழ்ச்சி பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாடு தழுவிய ரீதியில் தாபிக்கப்பட்டுள்ள மழை வீழ்ச்சி அளவீட்டு வலையமைப்பானது 483 நிலையங்களைக் கொண்டமைந்துள்ளதோடு அவற்றுள் 387 நிலையங்களிலிருந்து வருடம் பூராகவும் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இந்த நிலையங்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அவதானிப்பாளர்கள் என்போரது உதவியுடன் பேணிச் செல்லப்படுகின்றன. தினசரி 8.30 மணிக்கு மழைவீழ்ச்சி அளவிடப்படுவதோடு மாத இறுதியில் தினசரி மழைவீழ்ச்சி அறிக்கை திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. நாடு பூராகவும் பரவிச் செல்லும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 190 நிலையங்களுக்கான தரவுகள் எதிர்வுகூறல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு தினசரி தொலைபேசியின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டில் புதிய மழை வீழ்ச்சி அளவீட்டு

நிலையங்கள் 26 தாபிக்கப்பட்டதோடு 47 நிலையங்களில் காணப்பட்ட குறைபாடுகள் முழுமையாக்கப்பட்டன.

#### 2.1.1.1.3 விவசாய வானிலைத் தரவுகள்.

தரை மட்டத்திற்கு கீழிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற பிரதான வானிலை அவதானிப்புக்களாவன தரை மட்டத்திற்கு கீழ் 5, 10, 20 மற்றும் 30 செ.மீ. ஆழத்தில் காணப்படுகின்ற வெப்பம், மண்ணின் ஈரலிப்பு, தரை மட்டத்தின் வெப்பம் (grass temperature) ஆகிய பரமாணங்களாகும். வானிலை எதிர்வுகூறல்களுக்காக இத்தரவுகள் பயன்படுத்தப்படுவதில்லையென்பதோடு விவசாய வானிலைத் தேவைகளுக்காக அவை பயன்படுத்தப்படுகின்றன. திணைக்களமானது வரையறுக்கப்பட்ட உபகரணங்கள் வழங்கப்படுகின்ற மற்றும் ஏனைய தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகின்ற 35 விவசாய வானிலை நிலையங்களை இலங்கை பூராகவும் தாபித்துள்ளதோடு மேற்படி நிலையங்களை பராமரிக்கின்ற நிறுவனங்களின் மூலம் ஒவ்வொரு நாளும் மு.ப.8.30 மணிக்கும் பி.ப.5.30 மணிக்கும் குறிப்பிட்ட வாசிப்புகள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் தரவு முறைமைகளைப் பேணிச் செல்வதற்காக வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு வழங்கவும்படுகின்றன.

ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த வெப்பம், ஆவியாதல், சூரியஒளி மணித்தியாலங்களின் எண்ணிக்கை, காற்றின் வேகம் மற்றும் திசை மற்றும் மழைவீழ்ச்சி என்பன விவசாய வானிலை நிலையங்களில் தினசரி அளவிடப்பட்டு திணைக்களத்திற்குப் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற ஏனைய தரவுகளாகும். இந்த அனைத்துத் தரவுகளும் 2013 ஆம் ஆண்டிலும் பெற்றுக்கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட்டதோடு வாரம்தோறும் மழைவீழ்ச்சி, சிறு மற்றும் பெரும் போகங்களிலான மழை வீழ்ச்சி என்பவற்றின் மொத்தம், சராசரி மழை வீழ்ச்சி மற்றும் கிடைக்கப்பெற்ற மழை வீழ்ச்சி என்பவற்றுக்கிடையிலான வித்தியாசம் போன்ற தரவுகள் மேலதிக பகுப்பாய்வுக்காக உணவு மற்றும் விவசாய அமைப்புக்கு (Food and Agriculture Organization - FAO) பெற்றுக்கொடுக்கப்பட்டன.

#### 2.1.1.1.4 கடல்சார் தரவுகள்.

இதனைத் தவிர நாட்டைச் சுற்றியுள்ள கடலின் பேரலை உயரத்தில் (tide height) வருடம் பூராகவும் இடம்பெறுகின்ற மாற்றங்களை அவதானிப்பது அவசியமென்றாலும் அதற்காக இந்தியா கடந்த வருடத்திற்குரியதாக வெளியிட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வருடத்தில் நாட்டைச் சுற்றி ஒவ்வொரு இடத்திலும் கடலின் பேரலை உயரத்தின் ஊகிக்கப்பட்ட அளவுகள் கணக்கிடப்படுகின்றன. அதன் பிரகாரம், கடலலை மட்டம் உயர்வடைதல் பேரலை

காரணமாக இடம்பெறுகின்றதா, கடல் கொந்தளிப்புடன்கூடிய நிலைமை ஏற்பட்டு வருகின்றதா என்பன ஊகிக்கப்படுகின்றன. அதன்படி, 2012 ஆம் ஆண்டு இந்திய அவதானிப்புக்களைப் பயன்படுத்தி, 2013 ஆம் ஆண்டு முழுவதிலும் நாட்டைச் சுற்றியுள்ள கடலில் பேரலையின் உயரம் எந்தளவில் இருக்கக்கூடும் என்பது 2013 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கணக்கிடப்படுகின்றது.

### 2.1.1.2 வளிமண்டல அவதானிப்புகள் *(Air Observation)*

தரை மட்டத்திலிருந்து சுமார் 20 கி.மீ. உயரமுள்ள வளிமண்டலத்தில் பல்வேறுபட்ட உயரங்களைக் கொண்ட மட்டங்களில் அமுக்கம், வெப்பம், ஒப்பீட்டு ஈரப்பதன், காற்றின் வேகம் மற்றும் திசை ஆகிய பரமாணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற அவதானிப்புகள் உயர் வளிமண்டல அவதானிப்புக்களாகும். ரேடியோ சொண்ட உபகரணங்களைப் பயன்படுத்தி கிரின்விச் நேரத்தில் 0600 மணிக்கு வாரமொன்றுக்கு மூன்று தடவைகள் கொழும்பில் வைத்து அவதானிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரேடியோ சொண்ட அவதானிப்புக்களின் எண்ணிக்கை 106 ஆகும். தொழில்நுட்ப மற்றும் பிற காரணங்களின் அடிப்படையில் ரேடார் அவதானிப்புக்கள் இரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் முன்னோடி பலூன் (pilot balloon) அவதானிப்புக்களின் மூலம் காற்றின் வேகம் மற்றும் திசை அவதானிக்கப்படுகின்றது.



மன்னார், அம்பாந்தோட்டை, கொழும்பு மற்றும் பொலொன்னறுவை ஆகிய நிலையங்களில் முன்னோடி பலூன் பயன்படுத்துவதன் மூலம் கிரின்விச் நேரத்தில் 0000, 0600 மற்றும் 1200 மணித்தியாலத்தில் காற்றின் வேகம் மற்றும் திசை என்பன அவதானிக்கப்படுகின்றன. கொழும்பிலும் மேற்படி நிலையங்களிலும் கடந்த வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் எண்ணிக்கை முறையாக 920, 1064, 1018, 649 ஆகும்.

இந்த அனைத்துத் தரவுகளும் எதிர்வுகூறல் நடவடிக்கைகளுக்காக தேசிய வளிமண்டலவியல் நிலையத்திற்கும், சர்வதேச வலையமைப்புகளுக்கும் பெற்றுக்கொடுப்பதற்காக தொடர்பாடல் பிரிவுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் பல்வேறுபட்ட நிறுவனத் தேவைகள் என்பவற்றுக்காக பாதுகாப்புப் பிரிவுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

### 2.1.2 தரவு முறைமையைப் பாதுகாத்தல்

நாடு பூராகவும் அமைந்துள்ள வளிமண்டலவியல் நிலையங்கள், விவாசாய வானிலை நிலையங்கள் மற்றும் மழை வீழ்ச்சி அளவீட்டு நிலையங்கள் என்பவற்றிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற தரவுகள் கொழும்பு தலைமையகத்தில் இரண்டாவது பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவதுடன் திட்பநுட்பம் சந்தேகத்திற்கிடமானபோது மீண்டும் ஆராய்ந்து சரிசெய்யப்படும். நாளாந்த பரிசோதனைகள் மற்றும் மாதாந்த சுருக்கங்களைப் பரிசோதனை செய்தல் என்ற வகையில் பரிசோதனை செய்து உச்ச மட்ட திட்பநுட்பத்துடன் தரவுகள் பாதுகாக்கப்படும்.

2013 ஆம் ஆண்டில் பரிசோதனைக்காக கிடைக்கப்பெற்றுள்ள சுயப்பதிவு மழைவீழ்ச்சி அளவீட்டு சுட்டி (Puliyographs) வரைபுகள், சுயப்பதிவு வெப்பச் சுட்டி (Thermographs) வரைபுகள், சுயப்பதிவு ஈரப்பதன் சுட்டி (Hygrographs) வரைபுகள், சுயப்பதிவு அமுக்க (Barographs) வரைபுகள், கதிரொளி அளவீட்டு (Sunshine Cards) அட்டைகள் மற்றும் மழை வீழ்ச்சி செறிவு அறிக்கைகள் (RF Intensity Sheets) என்பவற்றின் எண்ணிக்கை முறையாக 7200, 7350, 7325, 1670, 210 மற்றும் 252 ஆகும். பரிசோதனையின் பொருட்டு கிடைக்கப்பெற்ற மாதாந்த சுருக்க அறிக்கைகளின் எண்ணிக்கை 273 ஆகும்.

இத்தரவுகளின் மென் பிரதிகள் தயரிக்கப்படுதல் மற்றும் பாதுகாத்தல் என்பன Climsoft மென்பொருளைப் பயன்படுத்துவதன் மூலம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. தரவுகளைக் கணனிமயமாக்கும் பணிகள் தினசரி மேற்கொள்ளப்பட்டன. பாதுகாக்கப்பட வேண்டிய அச்சு ஆவணங்களை மிகவும் பாதுகாப்பாகப் பேணுவதற்காக நவீன வசதிகளுடன் கூடிய பதிவேட்டறையொன்றை நிர்மாணித்து அச்சுப் பிரதிகளை முறையாக பாதுகாப்புடன் வைப்பதானது 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ள முடிந்தது.

### 2.1.3 தரவுகளைச் சந்தைப்படுத்துதல்

பல்கலைக்கழக மாணவர்கள் , பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொள்கின்றவர்கள் மற்றும் நிறுவனங்கள், காப்புறுதிக் கம்பனிகள், நிர்மாணக் கம்பனிகள் என்பன கடந்த கால வானிலைத் தரவுகளைக் கோருவதோடு கோரப்படுகின்ற தரவுகளின் அளவுக்கேற்ப 01 நாள் தொடக்கம் 07 நாட்கள் வரையிலான கால வீச்சினுள் தரவுகள் வெளியிடப்படுகின்றன. அரசாங்க நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வரையறுக்கப்பட்ட நிதிப்

பெறுமதியுடன்கூடிய தரவுகள் இலவசமாக வழங்கப்படுவதோடு உறுதிபடுத்தப்பட்ட மற்றும் உறுதிபடுத்தப்படாத தரவுகளாக விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.
அன்மித்த இரண்டுமாத காலப் பகுதியில் நிலவிய முழு விபர வானிலை அறிக்கைகள் 12 உம், ஒவ்வொரு தினத்தில் நிலவிய வானிலை விபரங்களை முழுமையாகப் பெற்றுத்தருகின்ற அறிக்கைகள் 122 உம், உறுதிபடுத்தப்பட்ட அறிக்கைகள் 100 உம், உறுதிப்படுத்தப்படாத தரவு அறிக்கைகள் 112 உம் சந்தைபடுத்தப்பட்டுள்ளதோடு 79 தரவு அறிக்கைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டு தரவுகளைச் சந்தைப்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் 6,5000,00 வாக அமைந்ததோடு மேற்படி வருடத்தினுள் தரவுகளைச் சந்தைப்படுத்தியதன் மூலம் 9,446,633 ரூபாவிலான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள திணைக்களத்தினால் முடிந்தது.

## 2.2 பொது மக்களுக்கும் பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கும் பல்வேறுபட்ட கைத்தொழில்களுக்கும் உரியதாக சமுதாயத்திற்கும் உலக வானிலை அவதானிப்பு வலையமைப்புகளுக்கும் தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல்.

### 2.2.1 பொதுமக்களுக்காக தினசரி வழங்கப்படும் தகவல்கள்

நாட்டுக்கான எதிர்வுகூறல்கள் மு.ப. 5.00, நன்பகல் 12.00 மற்றும் பி.ப. 4.00 மணிக்கும் சுற்றியுள்ள கடலில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் நிலவக்கூடிய மழை, காற்று, மின்னல், என்பவை பற்றிய எதிர்வுகூறல்கள் ஒவ்வொரு நாளும் மு.ப.5.00, நன்பகல் 12.00 மணிக்கு அச்சு மற்றும் ஒலிஒளி ஊடகங்களின் வாயிலாக தேசிய வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது.
வருடம் பூராகவும் பெற்றுத்தரப்பட்ட தினசரி வானிலை எதிர்வுகூறல்களின் எண்ணிக்கை 1095 ஆகும். ஊடகங்களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட 4223 விசரணைகளுக்கு தகவல்கள் வழங்கப்பட்டன. அத்தகவல்கள் www.meteo.gov.lkஇணையத்தளத்தினுாடாகவும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.
நாட்டின் 10 பிரதான நகரங்களுக்கான வானிலை நிலைமை ஒவ்வொரு நாளும் பி.ப. 4.00 மணிக்கு அச்சு, ஒலிஒளி ஊடகங்களுக்கும் இணையத்தளத்திற்கும் பெற்றுக்கொடுக்கப்படுவதோடு வருடம் பூராகவும் அத்தகைய அறிக்கைகள் 365 வழங்கப்பட்டன.

### 2.2.2 பலவேறுபட்ட நிறுவனங்களுக்கும் பல்வேறுபட்ட கைத்தொழில்களுக்கும் உரியதாக சமுதாயத்திற்குப் பெற்றுக்கொடுக்கப்படும் தகவல்கள்.

மீனவச் சமுதாயம், நிர்மாண நிறுவனங்கள், சுற்றுலா ஹோட்டல்கள், கப்பற் கம்பனிகள் மற்றும் முப்படையினராலும் பொலீசாராலும் அவர்களது பணிகளுக்கு உரிய தீர்மானங்களை மேற்கொள்வதற்காக வானிலைத் தகவல்கள் ஆராயப்படுவதோடு அச்சந்தர்ப்பத்திலேயே தேவையான தகவல்கள்

வழங்கப்படுகின்றன. வர்த்தக நிறுவனங்களிலிருந்து அத்தகைய விசாரணைகள் 1238உம் மீனவ மக்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் 730 உம் 2013 ஆம் ஆண்டில் கிடைத்ததோடு அவை அனைத்திற்காகவும் தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

நீதிமன்ற நடவடிக்கைகளின் போது சில தர்க்கங்களை உறுதிப்படுத்துதல் அல்லது முறியடித்தல் என்பவற்றுக்காக நிகழ்வுகள் ஏற்பட்ட தினங்களில் வானிலை பற்றிய சாட்சிகள் வழங்க நேரிடுகின்றது. 2013 ஆம் ஆண்டு நீதிமன்ற நடவடிக்கைகள் 02 க்காக சாட்சி வழங்கப்பட்டது.

நிர்மாணக் கைத்தொழில்துறையை அண்டியதாகவும் மின் மற்றும் மின்னல் காரணமாக ஏற்படுகின்ற சேதங்களின்போதும் காப்புறுதி உரித்துக்களைப் பெற்றுக்கொள்ளும்போது வானிலை அறிக்கைகள் 122, 2013 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்டன.

இதன் காரணமாக பல்வேறுபட்ட ஊடக நிறுவனங்களின் மூலம் நேர்காணல்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு நேர்காணல்களின் மூலம் வானிலைத் தகவல்கள் வழங்கப்படுகின்றன. கடந்த வருடம் அவ்வாறு வழங்கப்பட்டுள்ள நேர்காணல்களின் எண்ணிக்கை 35 ஆகும்.

### 2.2.3 உலக அவதானிப்பு வலையமைப்புகளுக்கு தரவுகளைப் பெற்றுக்கொடுத்தல்

தேசிய வளிமண்டலவியல் நிலையத்தில் அமைந்துள்ள வானிலை தொடர்பாடல் நிலையத்தின் மூலம் தேசிய மற்றம் வலய வானிலை பற்றிய தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இத்தரவுகள் புள்ளிவிபர ரீதியான தரவுகள், செய்மதிப் புகைப்படங்கள், மற்றும் எதிர்வுகூறல் மாதிரிகள் (Numerical Model Outputs) என்ற வகையில் வானிலைத் தரவுகள் மற்றும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

உள்நாட்டுத் தரவுகள் கிரின்விச் நேரத்தில் 0000, 0300, 0600, 0900, 1200, 1500, 1800, மற்றும் 2100 மணிக்கு பெற்றுக்கொள்ளப்படுவதோடு அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தரவுகள் உடனேயே வலய மற்றும் உலக வளிமண்டலவியல் நிலையங்களுக்கு அனுப்புவதற்காக புதுடில்லியில் அமைந்துள்ள வலய நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றன. இப்பணியானது கடந்த வருடம் பூராகவும் இடையறாது மேற்கொள்ளப்பட்டது.

## 2.3 விண் வானிலைத் தகவல்களை விமான சேவைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் கப்பற் பணிகளுக்காக சேவைகளை வழங்குதல்

### 2.3.1 விண் வானிலைத் தகவல்களை விமான சேவைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல்

விமானப் பயனங்களுக்குத் தடையேற்படுகின்ற அல்லது சாதகமான எத்தகைய நிலைமைகள் விமான ஓடுபாதையில் உள்ளன என்பதை வானில் பிரவேசிப்பதற்கு முன்னர் விமான ஓட்டி துல்லியமாக கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். பாதுகாப்பான விமானப் பயனத்திற்காக விமானப் பாதையின் காற்று, வெப்பம், அமுக்கம், மற்றும் மேகங்களினால் ஏற்படக்கூடிய தடைகள் தொடர்பாக பயனப் பாதையில் அமைந்துள்ள சகல விமான



நிலையங்களிலும் உள்ள வானிலைத் தகவல் பற்றிய அறிக்கையொன்றை (TAF) பயனம் ஆரம்பிக்கப்படுவதற்கு 3 மணித்தியாலங்களுக்கு முன்னர் விமான ஓட்டிக்குப் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். அதைத் தவிர ½ மணித்தியாலத்திற்கொரு முறை பெற்றுக்கொள்ளப்படும் வானிலை அவதானிப்புகள் (METAR)மற்றும் விசேட வானிலை நிலைமைகளின் போது (SIGMET)அறிக்கைகளை தேவைக்கு ஏற்ப பெற்றுக்கொடுக்கப்படுதல் வேண்டும். இத்தரவுகளும் தகவல்களும் சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு (ICAO) மற்றும் உலக வளிமண்டலவியல் சங்கம் என்பவற்றின் (WMO) தரநியமங்களுக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றன.

#### 2.3.1.1. கட்டுநாயக்க விமான நிலையம்.

கொழும்புத் தகவல் வலையத்தின் ஊடாக (Colombo FIR) பயனிக்கின்ற மற்றும் கட்டுநாயக்க விமான நிலையம் பயன்படுத்துகின்ற விமானங்களுக்காக கட்டுநாக்க விமான நிலையத்திலுள்ள வளிமண்டலவியல் அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ள TAF அறிக்கைகள் 1460 உம், METAR அறிக்கைகள் 17194 உம், SIGMET அறிக்கைகள் 134 உம், விமான நிலைய எச்சரிக்கை விடுத்தல்கள் (Aerodrome Warnings) 56 உம் ஆகும்.

#### 2.3.1.2 மத்தல விமான நிலையம்

2013 ஆம் ஆண்டு மத்தல சர்வதேச விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு வளிமண்டலவியல் அலுவலகம் மார்ச் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு TAF மற்றும் METAR என்பன வழங்கப்படுவதோடு SIGMET கட்டுநாயக்க அலுவலகத்தினால் விநியோகிகப்படுகின்றது. அதன்மூலம் TAF 1080 மற்றும் METAR 12960 விநியோகிக்கபட்டுள்ளன.

#### 2.3.1.3 இரத்மலான விமான நிலையம்

இரத்மலான விமான நிலையத்தினால் தொழிற்படுத்தப்படுகின்ற உள்ளக விமானப் பயன தொழிற்பாடுகளுக்கு அத்தியாவசியமான வானிலைத் தகவல்களை வழங்குதல் மற்றும் தினசரி தேவைப்படுகின்ற வளிமண்டலவியல் அவதானிப்புக்களை மேற்கொள்ளுதல் என்பன இந்த அலுவலகத்தில் பிரதானமாக இடம்பெற்றன. கட்டுநாயக்க விமான நிலைய வளிமண்டலவியல் நிலையத்தினால் வெளியிடப்படுகின்ற வானிலை எதிர்வுகூறல்களைப் பெற்றுக்கொண்டு இலங்கை விமானப் படைக்கும் ஏனைய உள்நாட்டு விமான சேவை நிறுவனங்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்படுவது இரத்மலான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய TAF அறிக்கைகள் 1460உம், METER அறிக்கைகள் 8265 உம் SPECi அறிக்கைகள் 210 உம் 2013 ஆம் ஆண்டினுள் இரத்மலான அலுவலகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளன. METER ஆனது காலை 05.30 தொடக்கம் மாலை 6.30 மணி வரை மட்டும் மேற்கொள்ளப்படுகின்றது.

#### 2.3.1.4 ஏனைய சேவைகள்

இலங்கை விமானப் படையின் பெரிசூட் பயிற்சிகளுக்குத் தேவையான வானிலை எதிர்வுகூறல்களை வெளியிடும் பணி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. கட்டுநாயக்க விமான நிலைய அலுவலகத்தினால் 2013 ஆம் ஆண்டு இந்த எதிர்வுகூறல்கள் 10320 வெளியிடப்பட்டுள்ளன.

### 2.3.2. கப்பற் பணிகளுக்காக சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல்

#### 2.3.2.1 கப்பற் பணிகளுக்காக தீவைச் சூழ்ந்த கடற் பிரதேசத்தின் வானிலை அறிக்கை (ஷிப்பிங் ரிபோர்ட்)

ஒவ்வொரு நாளும் மு.ப. 10.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கும் கொழும்பு ரேடியோவினால் கடற் படையினருக்கும், தொலை நகல் மற்றும் மின்னஞ்சல் மூலம் கடற்படை தலைமையகம், திருகோணமலை கடற்படை அலுவலகம் மற்றும் காலி

கடற் படை அலுவலகம் என்பவற்றுக்கும் இந்த அறிக்கைகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டு விநியோக்கப்பட்ட Shipping Report களின் எண்ணிக்கை 730 ஆகும்.




#### 2.3.2.2 சர்வதேச கடல் பிரதேசத்தின் வானிலை அறிக்கை *(குடநநவ குழசநஉயளவ)*

இந்த அறிக்கைகள் ஒவ்வொரு நாளும் மு. ப. 6.00 மணிக்கும் பி.ப.4.30 மணிக்கும் ஏற்கனவே கூறப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்கனவே சொல்லப்பட்ட தொடர்பாடல் முறைகளின் ஊடாக பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக கடலோரப் பாதுகாப்பு பிரிவுக்கும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. கடந்த வருடம் விநியோகிக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை 730 ஆகும்.

## 2.4 சுனாமி மற்றும் சீரற்ற வானிலை பற்றிய முன்னெச்சரிக்கை விடுத்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்

### 2.4.1 சுனாமி பற்றிய எச்சரிக்கைகளை விடுத்தல்

இலங்கையை அண்டிய பிரதேசங்களில் சுனாமி அச்சுறுத்தல்கள் மற்றும் நிலநடுக்கம் என்பன தொடர்பாக நிதமும் விழிப்பாகவிருக்கின்ற கலிப்போனியாவின் ஒருங்கிணைந்த நில நடுக்கங்கள் பற்றிய வலையமைப்பு (CISN), பசுபிக் சுனாமி தொடர்பாக முன்னெச்சரிக்கை விடுக்கும் நிலையம் (PTWC), ஜப்பான் வளிமண்டலவியல் ஏஜன்சி (JMA), சுனாமி பற்றிய தகவல்களைப் பெற்றுத்தரும் வலய நிலையம் (RTSP) புதுடில்லி வலய அலுவலகம் போன்ற நிறுவனங்களது ஒத்துழைப்புடன் பொது மக்களுக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் சுனாமி

பற்றிய முன்னெச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. கடந்த வருடத்தில் சுனாமி அச்சுறுத்தல் எதுவும் ஏற்படவில்லை.

#### 2.4.2 சீரற்ற வானிலை பற்றிய அறிவிப்புக்கள்

பலத்த மழை, மின்னல், பலத்த காற்று, புயல் நிலைமைகள், மற்றும் டொரெண்டோ போன்ற வானிலை நிலைமைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகின்ற சந்தர்ப்பங்களில் அச்சு மற்றும் ஒளிஒலி ஊடகங்களுக்கு அவை துரிதமாக அறிவிக்கப்படுவதோடு தாக்கம் ஏற்படுத்தும் பிரதேசங்களில் மாவட்டச் செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ நிலையம், முப்படை மற்றும் பொலிஸ் சமிஞ்சைப் பிரிவுகள், சனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், கடற்றொழில் அமைச்சு, கொழும்பு ரேடியோ என்பவை ஊடாக கப்பல்களுக்கும் தேசிய நீரியல் வள ஆய்வு நிறுவகம், மாஸ்டர் ரைவர்ஸ் கடலோரப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் வெளி வளிமண்டலவியல் நிறுவனங்கள் ஆகிய அனைத்துக்கும் அல்லது நிலைமைக்கேற்ப தேவைப்படும் நிறுவனங்களுக்கும் தொலை நகல் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். கடந்த வருடத்தில் சீரற்ற வானிலை பற்றிய அறிக்கைகள் 78 விநியோகிக்ப்பட்டுள்ளன.

## 2.5. விடயப் பரப்புத் தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்டுதல், ஆலோசனை மற்றும் உபகரணங்களை வழங்குதல்

### 2.5.1 பொது மக்களை விழிப்பூட்டுதல்

தலைமையகத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தருகின்றவர்களை விழிப்பூட்டுதல், வெளிப் பிரதேசங்களில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், கருத்தரங்குகள் மற்றும் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றல் என்பன மூலம் பொதுமக்களை விழிப்பூட்டும் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

#### 2.5.1.1 தலைமையகத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தருகின்றவர்களை விழிப்பூட்டுதல்

பாடசாலை மாணவர்கள், உயர் கல்வி நிறுவகங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பாதுகாப்புத் துறைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் திணைக்களத்தின்

நடவடிக்கைகள் தொடர்பாக அறிவினைப் பெற்றுக்கொள்வதற்காக நிதமும் தலைமையகத்திற்கு வருகை தருகின்றனர்.

வளிமண்டலவியல் பற்றிய ஒரு அறிமுகம், மேற்கொள்ளப்படுகின்ற அவதானிப்புக்கள், வானிலை உபகரணங்களைப் பயன்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஒவ்வொரு குழுக்களுக்கும் ஏற்புடையதாக அமைகின்ற வகையில் விரிவுரைகளை நடத்துதல், நடைமுறை ரீதியில் மேற்படி உபகரணங்கள் பயன்படுத்தப்படும் விதம், அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் விதம் தொடர்பாக அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் அவர்கள் விழிப்பூட்டப்படுகின்றனர். கடந்த வருடத்தில் திணைக்களத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தந்த மாணவர் குழுக்களின் எண்ணிக்கை 173 என்பதோடு மாணவர்களின் எண்ணிக்கை 20967 ஆகும். 10 உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 715 மாணவர்கள் வருகை தந்ததோடு 512 பாதுகாப்புப் படை அங்கத்தவர்கள் 18 குழக்களாகவும், அரச, தனியார் மற்றும் ஏனைய அமைப்புகளைச் சேர்ந்த 389 பேர் 13 குழுக்களாகவும் வருகை தந்தனர்.

**2.5.1.2 பிராந்திய ரீதியில் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.**

பிரதேசச் செயலாளர்களின் மூலம் அந்தந்த பிரதேசங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுவதோடு திணைக்கள பணியாற்தொகுதியினர் மற்றும் வருகைதரு விரிவுரையாளர்களின் மூலம் செயலமர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சீரற்ற காலநிலைகளின் போது இடம்பெறுக்கூடிய சேதங்களைக் குறைத்துக்கொள்வதற்காக முன்தயார் நிலையை ஏற்படுத்தும் பொருட்டு பொது மக்களை விழிப்பூட்டுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. வானிலை எதிர்வுகூறல்களை வெளியிடுதல், இலங்கையில் காலநிலை மாற்றங்கள், மின்னல் தாக்குதல்கள் தொடர்பாக பொறியியல் ஆலோசனைகள், டோர்னேடோ, சூறாவளி, நில அதிர்வுகள், சுனாமி விபத்துக்கள், வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் மற்றும் வறட்சி நிலைமைகள் தொடர்பாகவும் அவற்றிலிருந்து பாதுகாப்படைகின்ற விதம் தொடர்பாகவும் அறிவு வழங்கப்படுதல் அடிப்படையில் இடம்பெறுகின்றது.

**2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட செயலமர்வுகள்**

| தொடர் இல | மாவட்டம் | செயலமர்வுகள் நடத்தப்படும் இடங்கள் |
|---|---|---|
| 1 | கண்டி | ஹில்வூட் கல்லூரி( செயலமர்வுகள் - 2), மினிப்பே ரணசிங்க பிரேமதாச வித்தியாலயம், மினிப்பே பிரதேசச் செயலகம், இளைஞர் படையணி, கம்பளை |
| 2 | இரத்தினபுரி | ஏஹலியகொடை, பெல்மடுல்ல, கிரி எல்ல, ஓப்பநாயக்க, கொடகவெல, பலாங்கொடை, கொடிகமுவ, இரத்தினபுரி பிரதேச செயலகங்கள், கொஸ்பெலவின்ன, துறைக்கந்த கிராம சேவையாளர் பிரிவுகள், சப்ரகமுவ மாகாண சபை அலுவலகம். |
| 3 | களுத்துறை | தொடம்கொடை, (செயலமர்வுகள் - 2) ஹொரண(செயலமர்வுகள் - 2) பண்டாரகம, மில்லனிய, மதுராவல, பாலிந்தநுவர, அகலவத்தை, புலத்சிங்கள, இங்கிரிய, வலல்லாவிட்ட, மதுகம பிரதேச செயலகங்கள், களுத்துறை, பேருவளை மற்றும் பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவுகளின் சார்பாக களுத்துறை மாவட்டச் செயலகம், ஹொரண கோட்டக் கல்வி அலுவலகம் |
| 4 | கேகாலை | அரநாயக்க, ரம்புக்கன, புலத்கொகுபிட்டிய, பிரதேசச் செயலகங்கள், கேகாலை மாவட்டச் செயலகம், புனித ஜோசப் கல்லூரி. |
| 5 | பொலொனறுவை | லங்காபுர, மெதிரிகிரிய, இங்குரக்கொடை, எலஹெர, திம்புளாகல, வெலிகந்த, தமன்கடுவை பிரதேசச் செயலகங்கள். |
| 6 | நுவரெலியா | நுவரெலியா பிரதேசச் செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகம் |
| 7 | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம் மற்றம் பிரதேச சபை அலுவலகம் |
| 8 | கொழும்பு | ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, கொலொன்னாவ, சீதாவக்க, கடுவளை, திம்பிரிகஸ்யாய, ஹோமாகம, மஹரகம, கொழும்பு, தெஹிவளை, கெஸ்பாவ, மொரட்டுவை, இரத்மலான பிரதேசச் செயலகங்கள். |

| | | |
|---|---|---|
| 9 | காலி | நெழுவை, நாகொடை, ஹிக்கடுவை பிரதேசச் செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகம். |
| 10 | குருநாகல் | கிரிபாவ, கல்கமுவ, எஹட்டுவெவ, ரஸ்நாயக்கபுர, கொபெய்கனே, கொட்டவெஹெர, நிக்கவெரட்டிய பிரதேசச் செயலகங்கள் |

இந்த செயலமர்வுகளுக்காக மாவட்டச் செயலாளர்கள், பிரதேசச் செயலாளர்கள், மாகாண சபை உத்தியோகத்தர்கள், பிரதேசச் சபை உத்தியோகத்தர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள், விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர்கள், கிராமிய அனர்த்த முகாமைத்துவக் குழு அங்கத்தவர்கள், அதிபர்கள், ஆசியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகிய பரந்த வீச்சிலான ஆட்கள் பங்குபற்றியதோடு 2013 ஆம் ஆண்டு விழிப்பூட்டப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 5000 ஆகும்.

**நடத்தப்பட்ட மாவட்டங்கள்**



### 2.5.1.3 கருத்தரங்குகளும் கலந்துரையாடல்களும்

#### 2.5.1.3.1 உலக வளிமண்டலவியல் தினம்

உலக வளிமண்டலவியல் தினம் உயிாகள் மற்றும் சொத்துக்கள் மற்றும் உடமைகளை பாதுகாப்பதற்காக காலநிலை தொடர்பாக விழிப்புடன் இருத்தல் என்ற தொனிப்பொருளின் கீழ் மார்ச் மாதம் 21ஆந் திகதி உலக வளிமண்டலவியல் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இதற்காக ஆனந்தா, விசாகா, றோயல் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், 70 பேருக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டிட ஆய்வு நிறுவனம், முப்படைகள், பொலிசார், மின்சார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு உட்பட 21 நிறுவனங்களின் பிரதி நிதிகள் கலந்து கொண்டவர்கள்.

#### 2.5.1.3.2 பருவ நிலை தொடர்பான கலந்துரையாடல்

